



ஓலை 109| ஓசை 232| பிப்ரவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல

## பொருள்

பொருள் தேடும்போது பாவத்திற்குப்
பயந்து தேடிய பொருளை உறவோடு பகிர்ந்து உண்ணும்
இல்வாழ்பவனின் பரம்பரை ஒருகாலும் அழிவதில்லை.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு!

### நேரிசைக் கட்டளைக் கலிப்பா




மேகம் தென்றலின் வேட்கையால் மாரியாய்
மேன்மை பிள்ளையை மாண்புடன் பெற்றிடும்
மேகம் பற்றியே மின்னலும் கோளுமே
மின்னி மூட்டிட விண்ணுமே கேட்டதால்
காகம் போலவே கூக்குர லிட்டிட
கானில் பற்றிய தீயென காற்றினில்
போகத் தீவினை யானதே யாவுமே;
பொல்லாக் கோளுமே மூட்டலும் தீதுவே!

பகலின் காதினில் மின்மினி, நிலவைப்
பதமாய்க் கோளுமே மூட்டிட மண்ணிலே
முகமும் சீர்மையும் அற்றுமே போகுமோ?
முழுக்க மூடியே மூலையின் தன்னிலே
அகமும் பேரொளிப் பெற்றிடும் நல்லவர்
அலறி யென்றுமே அன்பரும் துன்புறார்;
நகமும் ஒட்டிய தோலென தீயுடன்
நகரும் காற்றினால் தீதிலை காண்பிரே!

உடலில் கோடியாய் வாய்களும் கொண்டுமே
உலகின் எங்கெலாம் கோள்களும் கூறிட
உடலில் கோடியாய்க் காதுகள் கொண்டுமே
உறுப்பும் கேட்பதால் தீயுடன் காற்றுமே
படர்ந்த போதினில் செல்வமும் ஆளுமை
பதமாய்ச் சேர்ந்திட கோள்களும் மூட்டினோர்
முடங்கிப் போவரே; நல்வினை தன்னையே
முடக்க ஆகுமோ தீவினை தன்னிலே!




**இலக்கணக் குறிப்பு:**
நேரசையில் தொடங்கினால் அரையடிக்குப் பதினொன்று எழுத்துகள்,
நிரையசையில் தொடங்கினால் அரையடிக்குப் பன்னிரண்டு எழுத்துகள் என்று,
ஒற்று நீக்கி எண்ணல் வேண்டும்

வாய்பாடு: மா, விளம், விளம், விளம்.

திரு நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

(குறள் வெண்பா)


1.உலக மறையால் உயரும் உயிர்கள்
உலத்தலை நீக்கும் உணர்.

2.ஈரடியால் பூமியை ஈர்த்த பொலிவாலே
ஈதை அழிந்ததே ஈண்டு.

3.வள்ளுவம் தன்னை வலிந்தே பயின்றிடக்
கள்ளம் அகலுமே காண்.

4.எல்லாப் பொருளுமே எக்கராய் உள்ளதால்
எல்லரும் போற்றும் எழில்.

5.எண்ணலைத் தீர்க்கமாய் எல்லை கடவாமல்
எண்மையாய்க் கூறியதை எண்.




கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# கொடுமையைச் செய்யேல்

பாவகை : வஞ்சித் துறை

பா வகைக்கான வாய்பாடு:
*வஞ்சித் துறை* என்பது அடி தோறும்
இரு சீரான குறளடி கொண்டு
அளவொத்து நான்கடியாய் வருவது

வாழ்க்கையையே கொடையாக்கி
வனப்புடனே நீவாழ
ஏழ்மையிலும் எழிலுடனே
வளர்ப்பவரும் பெற்றோரே.
தாழ்ந்துமே நீயென்றும்
தரையினிலே காத்திடுவாய்
கீழ்மைக்குணம் இல்லாமல்
பேரிறைகளைப் போற்றிடுவாய்.

பெற்றவரையே காப்பதுமே
பெருங்கடனே அறிந்திடுவாய்
முற்றுமேதுற ந்தேயுனக்கும்
முகவரியும் தந்திடுவார்
அற்றமேநீ செய்திடாதே
அன்புடனே காத்திடுவாய்
குற்றமின்றி வாழ்வினிலே
குன்றெனவே நின்றிடுவாய்



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# இறுதி யாத்திரை

ஒருநாள் காரில் போக
ஆசைப்பட்ட அம்மா;
வானவெடியோடும்
மாலை மரியாதையோடும்
பேண்டு வாத்தியங்கள் முழங்க,
சுற்றமும் நட்பும் புடைசூழ;
அலுங்காமல் குலுங்காமல்
பயணிக்கிறாள்
சொர்க்க ரதத்தில்...!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# கற்பனை செய்து பார்



அமைதி இல்லா உலகில்
எங்கும் நிம்மதியாக.

ஏக்கமில்லா
எல்லையற்ற பூமியாக.

ஓசோன் ஓட்டையில்
ஒட்டு மொத்த மக்களும் செப்பனிட.

மேடு பள்ளம் இல்லாத
சமுதாயத்திற்காக.


எல்லாமும் எல்லாருக்கும்
கிடைத்திட.

தங்க மழை பெய்ய
தனித்தமிழ் எங்கும் மணக்க.

பொய்மை இல்லாத
மனித குல வாழ்வு
புலர்ந்திட. மகிழ்வே.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# சீவக சிந்தாமணி (பதினான்கு)



3. காந்தருவதத்தையார் இலம்பகம் .
( சீவகன் தந்தை கந்துக்கடன் மேலும் கூறினார் )

நகரில் பரத்தையர்கள் ஆடும் கூத்துத்திருவிழா
சிகரமாக மன்னன் கட்டியங்காரன் வீற்றிருக்கிறான்
நகரமக்களோடு சீவகனும் ஆர்வமுடன் இருக்கிறான்
பகட்டுக்காரி அனங்கமாலை அரங்கில் ஆடுகிறாள்

முல்லை மலர்மாலை அணிந்து ஆடுகிறாள்
இல்லாத இடையின் அதிசயம் தேடினர்
பல்லாயிரம் கண்கள் அவளையே மொய்க்க
இவள் கண்கள் மட்டும் சீவகன்மேல்

அவள் வானத்து தாரகை அனங்கமாலை
கவனமாக எழுதிய அழைப்பு மடல்
தனக்குத் தான் மன்னன் நினைத்திருக்க
அவளை சீவகன் காணுமாறு விடுத்தனள்

ஆடுபவள் விருப்பத்தை குறிப்பால் உணர்ந்தான்
கூடியிருக்க அரசன் தன்னையே மறுக்கிறாள்
ஆடியது போதும் கரம் பற்றினான்
அவளை அரண்மணைக்கு இழுத்துச்சென்றான்

இந்தச்சூழல் , யாழ்ப்போருக்குச் செல்கிறாய்
எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம்
"நின்று மைந்த விழிப்புடன் செல்க"
கந்துக்கடன் விடை கொடுத்து அனுப்பினான்

மணியும் ஆரமும் உடைய மார்பன்
பெண்மணிகள் மனதைக் கொள்ளைக் கொண்டான்
கணிகன் பொதிகைமலை சந்தனம் பூசினான்
பெண்கள் விரும்பும் முருகன் போன்றிருந்தான்

முகப்படாம் அணிந்த கருமலை யானைமேல்
பகட்டுதல் இல்லாமல் துதிக்கைவழி ஏறினான்
அழகிய யாழ் மண்டபத்தை அடைந்தான்
அழகன் சீவகனுக்கு விண்அதிர கரவொலி

இசையில் வல்லவன் யாழ்ப்போரில் வென்றான்
அசைவே இல்லாத தாயின்கரு அசைந்தது
இசைகேட்ட மக்கள் மெய் மறந்தனர்
அசையும் இலைகள் ஆடாமல் நின்றன

தத்தையார் மகிழ்ந்தாள் தோல்வியை ஏற்றாள்
சொன்னபடி சீவகன் கழுத்தில் அணிந்தாள்
பார்த்தவர்கள் அவனை பாராட்டி மகிழ்ந்தனர்
தோற்ற இளவரசர்கள் ஒன்று கூடினர்

"கணவனாகும் உரிமை உனக்கு இல்லை
மணாளன் சீவகனே எழுக போரிடுக"
அனைத்து வீரர்களும் வாளோடு மோதினர்
அனைத்து வீரர்களும்புறமுதுகிட்டனர்
நினைத்தபடி அவளைத் திருமணம் செய்தான்
தத்தையுடன பெரிதும் மகிழ்ந்திருந்தான்
--- கந்தருவதத்தையார் இலம்பகம் முற்றிற்று
ஆகச் செய்யுட்கள் ; 850

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# பட்ட மரமும் காதலும்

பட்ட மரத்தில் பூத்தது
பனி மலர் ஒன்று
பட்டாங்கே பரமனின் இருப்பு
□
வெட்டுப்பட்ட மரம் அது
காதல் துளிர்த்த இணை
அமர அரியாசனம் ஆகியது;
□
மரத்தை வெட்டி சாய்த்தாயிற்று
அடி மரத்தில் செதுக்கல்
நான் உன்னை காதலிக்கிறேன்
□
மழையில் சரிந்த மரம்
பேசியது நானின்றி அவர்கள்
எங்கே சந்திப்பார்கள் நாளை
□
கையெட்டும் உயரத்தில் பட்டமர
பொந்து உயிர்ப்புடன் இருக்கிறது
காதல் கடிதங்களால் நிரம்ப



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூர்

# கள்ளுண்ணாமை

## அதிகாரம் : 93



கள்ளுண்ணாமை

கள்விரும்பித் திரிவோர்க்கு
பகைவர் அஞ்சிடார்.
அஃதிலுங்கொடுமை தானெய்திய
புகழையுமிழந்து நிற்பர்.

அறிவுமயக்கும் கள்ளை
அறிவுடையார் அருந்தலாகார்.
சான்றோரிகழ்ச்சி விரும்புவோரே
அருந்துதல் சரியாம்.

பெற்றெடுத்த அன்னைமுன்னும்
குற்றமற்ற சான்றோர்முன்னும்.
கள்ளுண்டு களித்தலவர்க்கு
துன்பந்தரும் செயலாம்.

கள்ளுண்ணலெனும் விரும்பத்தகா
பெருங்குற்றம் புரிவோர்முன்.
நாணமெனும் நல்லவள்
அருவருத்து அகன்றுபோவாள்.

விலைகொடுத்து கள்ளுண்டு
தன்நிலைமறக்கும் அறியாமையை.
எந்நிலை அறியாமையிலும்
சேர்த்தல் அரிதாம்.

உறக்கத்தில் அறிவிழப்பதால்
இறந்தோர்க்கு ஒப்பாவோம்.
கள்ளுண்டு அறிவிழப்போர்
நஞ்சுண்டோர்க்கு ஒப்பராம்.

மறைந்திருந்து கள்ளுண்டு
மயங்கியுழல்வோரை அறிந்த.
உள்ளூரில் வாழ்வோர்
எள்ளி நகையாடுவர்.

கள்ளுண்டுமயங்கயில் குற்றம்
வெளிப்படுமாகையால் அவன்.
யான் கள்ளுண்டறியேன்
எனும்சொல் கைவிடல்நலம்.

கள்ளுண்டு மயங்கியோரை
காரணங்காட்டித் தெளிவித்தல்.
நீரினுள் மூழ்கியோனை
தீவிளக்கால் தேடுவதுபோலாகும்.

கள்ளுண்பவன் தெளிந்தபொழுது
தள்ளாடி மயங்கியோனைக்கண்டு.
தன்நிலையும் இதுபோலேயென
தான்நினைக்க மாட்டானோ?!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# தமிழ்க்கொண்டு கயவரை வெல்க

மொழி மெல்ல மறந்து
மதத்தை இறுகப்பற்றி
மன பிறழ்ச்சி சூழ
அகம் அறுக்கும் அவ்வியர் .

ஆற்றுத் தலைவன் உறையும்
குன்றை குறையாக நீட்டி
கேடு இழைத்த காடையர்.

மதமென்னும் இருள் அகற்றி
அன்பென்னும் ஒளி யேற்றி
அரணாக கூடுவோம் .
தமிழ் நிலம் காப்போம்.

மதமென்னும் மாய வலை வீசி
மனதை கவ்வும் உதக்கன்
ஒண்ட வந்த பிடாரி சொல் கேட்டு
ஒட்டி உறவாடிய தோழமையோடு
பகை வளர்க்காதே..

கேழல் உழுத புழுதி போல்
தென்னவன் நாட்டை அகழும்
தடியுடை காடையர்.



கழிசடை உலா வரும் காலம்
விழிப்போடு இருந்திடுக.
நொச்சி இருக்கும் திசையில்
நுளம்பு நுழையா.
தெள்ளிய சிந்தையோடு நில்
தமிழ்க் கொண்டு கயவரை வெல்க.

கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# நரம்புகளை மீட்டும் இசை

மௌனமென்பது
இசையாகிறது

நாம் சந்தித்து
பிரியும் தருணத்தில்

நரம்புகளை மீட்டி
நம்மிருவர் உள்ளங்களில்
ஒரே பாடலை இசைக்கிறது



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தமிழர் திருநாள்

தையும் பிறந்தது
கவலையும் மறைந்தது
மகசூல் கிடைத்தது
மகிழ்வும் உண்டானது

பொங்கலும் பொங்கியது
உறவும் கொண்டாடுது
தித்திக்கும் கரும்பும்
திகட்டாத இன்சுவையானது

பசுமை எங்கும்
செழித்திட ஆனந்தமே
எண்ணமது ஈடேறிட
ஏக்கமது தீர்ந்திடுமே

தன்னம்பிக்கை ஊட்டிய
விடாமுயற்சி வெற்றியானதே
உழவனின் வாழ்வில்
ஏற்றமது வந்ததே/

இதயத்தில் இனிமை
வந்திட குதூகலமே
ஓயாத உழைப்பில்
சிறப்பான முன்னேற்றமே

தென்றல் காற்றில்
தலையாட்டும் மரங்கள்
கரம் கோர்த்து
இணைந்திட்ட மனங்கள்



கல்யாண கனவுகள்
நிறைவேறும் மாதமிதுவே
சல்லிக்கட்டு காளையும்
சீறிப் பாய்ந்திடுமே

மீசையை முறுக்கி
காளையை அடக்கும் இளைஞர்களே!
நம்பிக்கை தோற்பதில்லை
வாழ்வில் வீழ்ச்சியில்லை

எந்நாளும் தமிழர் திருநாள்
புதிய நம்பிக்கைதனை தந்திடுதே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# ஆண்கள் கண்ணீர்

குழந்தையில் குழந்தையாக அழுகிறான்
பாலினம் அவனை அப்போது முடக்காததால்!
பால் குணத்தில் பாலகனாகவே
பால் நீரோடை போல் இருக்கும்
அவன் கண்களில் கண்ணீர் ததும்பும்
பாலினை போலவே தந்துப்போகும்!

விடலையில் அவனின் ஊசலாட்டங்களில்
உளவியலே உழன்று போகும்
அளவு ஆழ்மனதினில் எண்ணங்களின்
வரும் கண்ணீரின் அலைகளில்
அவன் மூழ்கி மூழ்காது தத்தளித்து இருப்பான்!
காளையின் உறுதியில் இருந்தாலும்
சிறிதோ பெரிதோ கண்ணீரை
உள் கலக்கங்களோடு மறைத்திருப்பான்!

மறவோன்! மறந்து மறக்காமல்,
மறந்தும் மறக்காத முகங்களையும்,
அனுபவங்களையும் அசைப்போடும்.
கண்ணீரின் வரட்சி கண்களுக்குள்
பாலையாய் ஆகியிருக்கும்.

முதுநிலை! தான் அழுத முதல்நாள்
வேண்டுமென ஏக்கத்தோடு
இறுதி நாளின் பயணத்திற்காக காத்திருப்பான்!
எல்லாம் அடைந்ததுமாய்,
எல்லாம் இழந்ததுமாய் இருந்தாலும்,
கண்ணீர் துளிகளின்
வருகைக்காகத்தான்
அந்த ஏக்கமென அறிந்தவர் சிலரே!
அச்சிலரில் சிலர்
தன் கண்ணீரோடு கரைவர், மிகுதி சிலர்
பலரின் கண்ணீரில் கரைவர்!

என்றென்றும் ஆண்களின் கண்ணீர்
பாலையின் காணல் அல்ல,ஆழியின் காணல்!



கவிஞர் நூருல் நயீமா அனஸ்

# நீ பாதி நான் பாதி

இரு வேறு கிரகம்
இரு வேறு உணர்வுகள்
இரு வேறு துருவங்கள்
இணைந்து வாழ்ந்தால்.

அங்கே மின்னல் இருக்கும்
இடி இடிக்கும்! மழை இருக்கும்!
மனமிருந்தால் மகிழ்ச்சி கோடியிருக்கும்
மகிழ்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் தான் திருமணம்

மலர்ந்து சிரித்தாலே நறுமணம் வீசும்
கசக்கி முகர்ந்தாலோ கருகும்
வந்து போகின்ற வாழ்க்கை இது

அதில் வாலிபம் சில நாள்
வாஞ்சைக்கு எதற்கு கணக்கு?
காதலுக்கு பதில் எதற்கு பிணக்கு?
விட்டுக் கொடு! தட்டிக் கொடு!

மலர்கள் பூத்துக் குலுங்கும்
மகிழ்ச்சி வழிந்து ததும்பும்
வண்ணத்துப்பூச்சிகள் தோளில் அமரும்
வாலிபம் தேனாய் இனிக்கும்

மூத்து முதிர்ந்தாலும் காதலுக்கு விடுமுறை இல்லை
அன்பும் காதலும் வேண்டாத பொருளில்லை!
இவ்விரண்டும் இல்லாமல் வாழ்வில் பொருள் இல்லை!
இருந்தோமென்று வேண்டாம்!

அன்பின்றி அனைத்தும் இருந்தும் என்ன?
அனைத்தும் இருந்தும் அன்பின்றி என்ன?
அன்புடையார் எல்லாம் உடையார்!
ஆர்ப்பரிக்கட்டும்!வேர் பிடிக்கட்டும்!!

வாழ்வாங்கு வாழ்ந்தோம் என்று வேண்டும்!
அன்பே அறம் தான்
ஆதலினால் காதல் செய்வீர்
ஊடல் கண்டு உவகை செய்வீர்



கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# கடல் அன்னை

அன்னை என்ற மூன்றெழுத்தே அழகு
கடல் அலையும் அழகோ அழகு
நீந்தும் மீன் கூட்டமும் அழகு
மணல் சிற்பத்தில் எழுதுவதும் அழகு
அலைகள் நம்மை அழைப்பதும் அழகு
கடல்வாழ் உயிரினங்களை இரசிப்பதும் அழகு
காற்றோடு உரசி தாலாட்டுவதும் அழகு
காதலர்களின் நினைவுச் சுவடுகள் அழகு
எண்ணிலடங்கா கடைகளை காண்பதும் அழகு
வெளிநாட்டு பயணிகள் படையெடுப்பதும் அழகு
மீனவன் தூண்டில் போடுவதும் அழகு
கடல்குச்சிகளை கையில் எடுப்பதும் அழகு
சங்கு மாலைகளை காண்பதும் அழகு
சூரியன் உதித்து மறைவதும் அழகு
கடல் அன்னை கண்களுக்கு அழகு
காட்சி இதமான உள்ளத்திற்கு அழகு
நாஞ்சில் மண்ணிலிருந்து



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# காதல்

அன்பே உன் நினைவுகள் என்னும்
வேலியில் என் காதலின் எச்சங்கள்
மிச்சங்களாய்

என்னவளே காதலின் பக்கங்களில்
நாம் என்றுமே முற்றுப்புள்ளி இல்லாத
தொடர்கதைகளாய்

என் காதல் நூலகத்தில் உந்தன்
மௌனம் மட்டுமே தினந்தோறும்
சத்தங்களாய்

உந்தன் இதழோர புன்னகை துளிகள்
என் காதல் தாகம் தீர்க்கும்
நீர் துளிகளாய்

உன் நினைவுகள் ஞாபகங்களாய்
வியர்க்கும் பொழுது அதில் வேர்வை
துளிகளாய் உன் முகம்

பெண்ணே உந்தன் காதல்
புன்னகையில் நான் நாள்தோறும்
உற்சாகத்தின் உரசல்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# களைப்படைந்த அவள் காவியமானாள்

கொஞ்சம் நில்லுங்களேன்! ஏன் அப்படி பேசுகிறீர்?
கொஞ்சம் அசதியாய் இருந்தது அவ்வளவுதான்.
அந்த அசதியில் ஒரு ஒய்வை தேடித்தான் ஓடித்திரிந்தேன்
எனக்கு ஏற்றதுபோல் கிடைத்தவுடன் ஓய்வெடுக்கிறேன்
இதை நான் தேடி விரும்பி ஏற்ற ஒன்று.
அதையும் தாண்டி இது இறைவன் எனக்கு தந்த அன்பளிப்பு.


இங்கு நான் நானாக இருக்கிறேன்.
அதனால் தான் நான் உங்களில் வேறாக
சுயநல உலகில் தென்படுகின்றேன்.
இது என் பிழையோ அல்லது உங்கள் பிழையோ அல்ல.
இது வேரடியில் சருகாக விழுந்த பூவிலிருந்த சின்னவடு
மண்ணுக்கு உரமாகி மீண்டும் மரமாக உருவெடுத்த கதை இது.

யாருமே ஏன் அந்த பூவே எதிர்பார்க்காத திருப்புமுனை கதைதான் இது.
இது வலித்தாலும்; இதுவே என் வலிமையின் வழி இது.



கவிஞர் அ. பாத்திமா சிமாறா, நிந்தவூர் (இலங்கை)

# என் காதலே நீ எங்கே?



பெரிதாக ஆசையெல்லாம் இல்லை
ஆனாலும் அவ்வாறு சொல்வது தகுமோ? தெரியவில்லை.

உன்னோடு நீண்ட காலப்பயணம் வேண்டும்.
உன் சாம்பாத்தியத்தில் என் தேவைகள் நிறைவேறனும்.
தொழுகை நேரத்தை எனக்கும் நினைவூட்டி
நீயும் கடமை முடிக்கனும்.
பேச்சின் ஆழத்தில் மௌனத்தை
நீயும் கடைப்பிடிக்கனும்.

பிடிவாத நேரத்தில் கண்டிப்பால் காயமில்லாது அதட்டிடனும்..
செல்ல சண்டைகள் வேண்டும்
சேவகம் பிடித்தே நான் செய்திடனும்.
பயணங்களுகாக நேரம் நீயும் தந்திடனும்
தரணியில் தடம் பதித்திடனும்.
தொட்டு பாரா தூரம்
நெஞ்சருகில் பந்தமென வந்தது போல உன்னோடு வாழனும்.

இடறுகள் வந்தாலும் பதராது பாதுகாத்திடனும்.
சறுக்கள்கள் வந்தாலும் சுருங்க விடாது காத்திடனும்.
வேலை வேலை என அலையாது
வேளாவேளைக்கு எனக்கென நீ நேரமிடனும்..

இயல்புகளைக் கண்டு ரசனையில் சேர்த்திடு
மாற்றி விடென அடம் கொள்ளாதே வலித்திடும் சோம்பல்களில்
கவ்விக்கொள்ளும் பாசதூதில் நனைத்து உற்சாகமூட்டிடு.
உன் கைக்குள் விரல் புகுத்தி நடைப்போடனும்
செல்ல சீண்டலில் சிரித்து மழுப்பிடனும்.

ஆசை தூதில் சேதி அனுப்ப யாரை அழைப்பதோ?
காற்றாக மாறி வாசத்தோடு உன்னருகில் வரனுமோ?
ஊற்றாக மாறி உன் அருகில் நீராகி போகட்டுமா?
குளிராக உருவெடுத்து உன் தேகம் சிலிர்த்திட வரட்டுமா?
பட்ஷியாக மாறி உன் தோளில் இளைப்பாற வந்திடட்டுமா?
கரம் கோர்த்து இறைவோனையே கேட்கிறேன் உன் வரவை .

கவிஞர் சஹ்னாஸ் பேகம், இலங்கை

# ஏலியன்

சூப்பர்நோவா எனும்
பெருஞ்சூரியனின் மிச்சம் நான்!
கருந்துளையின் வெடிப்பில்
வெளியான கதிர்வீச்சு நான்!
மிளிரும் ஒளியாக,
அலறும் ரேடியோ
அலையாக வருவதும்
நான்!
பறக்கும் தட்டாக
பூமிக்கு வரும்
அழையா விருந்தாளி
நான்!
மின்னல் செல்லும்
பாதையில் வெகுதூரம்
பயணிக்கும் விவரம் அறிந்தவன்
நான்!
உங்கள் விஞ்ஞானத்தின்
விடையறியா ஓராயிரம்
கேள்விகளின்
ஒட்டு மொத்த வடிவம்
நான்!
அறிவியலால் என்னை
அறியும் காலம் வரை
உன்னை ஆளும் ஆண்டவன்
நான்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை-119

# அவன் நான் கனா

ஏதோ பந்தம்
என்னவென்றே புரியா தருணம்
பாடல் வரிகளை முதன்முதலில்
கவனித்த நினைவு

தொட்டு போகும் தென்றலாய்
அவன் விழிகள்.
தொடரும் பாதங்களோடு நானும்
அவன் மூச்சு கலந்த தென்றலை
நான் சுவாசிக்க




விழிகள் சந்திக்க
மெய் வருடும் பூங்காற்றில்
அவன் வாசனை.

கண்களை இறுக மூடி
இரவுகளை கழிக்க
நித்திரையிலும் அவனோடே
கனவுகளில் சுகித்து

அவன் கரங்களுக்கு நடுவில்
நெருக்கமாய் அவன் மார்போடு
என் சிகை உரச
மூச்சின் சூட்டில் செவி கூசிட
பாவித்தேனே.

இதழ் சற்று விரிய புன்னகைத்தேன்
துயிலெல நினைவுகளில்
வாழ்கிறேன் அவனுக்குள்ளும்.
அவன் எதிரும்.


அடி ஆழத்தில் சேமித்தேன்
அவ்வாசனையை.
சற்று சுயம் மறந்தே பயணிக்கிறேன்
விழித்திரை முன் திரையில்
வழி மறைந்து விரல் கோர்க்க.

எல்லையற்ற நெடுக பயணமாம்.
ஆசைகளைப் பூர்த்தி செய்ய
ஆண்டவனின் அருள்
என் கனவுகளும் கற்பனைகளும்.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# தாய் மடி

துன்பங்கள் என்னை
துரத்தும் போது
நான் இருக்கிறேன் என்று
அவள் என் முடி  கோதி
என் தலையை
அவள் மடியில் சாய்க்கும் போது
தாய்மடி தேடும்
குழந்தை ஆகிறேன்.



கவிஞர் மு. வீரக்குமார் ராஜா, போடிநாயக்கனூர்

# வெந்து போகுது மனம் உருகி

கரடு முரடு குறுக்கு
பாதையிலே ஓடி
கால் கடுக்க
நிக்கிற கருவாச்சியே
முரட்டு மாமன்
நான் உன்னை
மிரட்டிப் பேச
மனசு வரல்ல
வெத்தல போட்ட
இதழ் அழகி
வெந்து போகுது
மனமுருகி
எத்தனை நாளாய்
உனக்காகக் காத்திருப்பேன்
"அத்தானே" என்றே
எப்போது அழைத்திடுவாய்?
தொட்டுப் பேச
எனக்கும் ஆசைதான்
கெட்டி மேளம்
கொட்டுவதும் எப்போதுதான்?



கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# தொலைதூரக் காதல்

தொலைவில் மலர்ந்த
தேடலின் இன்பம்
அழகிய காத்திருப்பாய்
என்னை தழுவும்

ஒற்றை அழைப்புக்காக
மொத்த நாளும்
ஏக்கமாய்க் காற்றில்
கரைந்துவிடும்

பேசித் தீராத
தொலைபேசி உரையாடல்
தூக்கம் சினமாக
அதை நிறுத்திவிடும்

ஏக்கம் வெறுமையாய்
என் நாள்களைத்
தனிச்சிறையாய்த்
திருடிக் கொள்ளும்

சிந்திக்க நினைக்கும்
எல்லா நேரங்களிலும்
அவனது நினைவுகள்
எனை வென்றுவிடும்

தோள்சாய நினைக்கும்
அலைச்சலின்போது
தலையணையின்
மௌனமே துணையாகும்




அருகிலே அவன் குரல் கேட்க
மனமோ
விடாப்பிடியாய் அழுது தீர்க்கும்

தொலைதூரம் இருந்தாலும்
கனவின் வழியில் அவனும்
நான் இணைந்த மௌன மொழியில்

இதயம் ஒரு அலைபேசி துடிப்பாய்
தொலைதூரக் காதல் என்றும் உயிர்த்திருக்கிறது

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# தொலைதூரக் காதல்

அடிமையை அகற்றிய
ஆப்ரஹாம் லிங்கன்!
அமெரிக்கா பெற்ற
ஆருயிர் தலைவன்!


வறுமை கண்டெடுத்த
வரலாற்று புதையல்!
நாகரிக அரசியலின்
மகத்தான விடியல்!

தச்சர் குடும்பத்தின்
தத்துவ புதல்வன்!
செருப்பினும் கிழிந்த
மனிதத்தை தைத்தவன்!

கருப்பின மக்களின்
நிரந்தர விடிவெள்ளி!
அடிமை குலத்தின்
கலங்கரை விளக்கு!

தந்தையை இகழ்ந்தாரை
தலைவணங்க வைத்தவர்!
தன்மானத்தை கூட
வெகுமானமாக தந்தவர்!

அரசியல் இன்றும்
உன்னை வணங்கும்!
எதிர்காலம் என்றும்
உன்னைப் போற்றும்!



கவிஞர் அனல் நிலவன், கொசவபட்டி, திண்டுக்கல்

# எம்மை மன்னியும் பாரதி

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா என்றாயே
நாம் சற்றே மாற்றிக் கொண்டோம்.
காலை எழுந்தவுடன் கைபேசி -
பின்பு களிப்புக் கொடுக்க நல்ல சினிமா பாட்டு.
மாலை முழுதும் அரட்டை - அது
இருப்பதில்லை ஒரு கொரட்டை. என்று.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# நல்ல மேய்ப்பன்

தீ பார்வை கொண்ட திடமான இளைஞர்களே
நாளைய உலகின் நம்பிக்கை நட்சத்திரங்களே

எதிர்கால இந்தியாவின் ஏற்றம் தந்து மாற்றம் காணும் அற்புதர்களே
நேர்கொண்ட பார்வையம் நேர்வழி பாதையுமே
லட்சியமாய் கொண்டு செயல்படும் இளைஞர்களே

போதை என்னும் பாதையிலே புத்தி மழுங்கி போகும் முன்னே
சிந்தித்துப் பார்த்து சீர்தூக்கி செயல்படும் அற்புத இளைஞர்களே

*நல்ல மேய்ப்பன் இல்லாத மந்தை திசை மாறும்* என்ற நிலையை
சக இளைஞர்களுக்கும் பக்குவமாய் புரிய வைத்து
போதையின் தீமைகளை புத்தியில் ஏற்றி வைத்து
புதியதோர் சமூகம் காண புயலாய் புறப்படுங்கள்



நீங்கள் உங்களையும் சக தோழர்களையும்
இளைஞர்களுக்கு *நல்ல மேய்ப்பனாக* செயல்படுங்கள்
புதிய வரலாறு எழுதுங்கள் போதை என்னும்
பாதைகள் தூர்ந்தே போகட்டும்

ஆக்கத்தின் வழி நின்று வரலாறு படையுங்கள்
*காலம் கடந்தும் வாழும் வரலாறு*
உங்களுக்கே சொந்தமாய் ஆகட்டும் இளைஞர்களே

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

எல்லா காதலிலும்
இல்லறம் இனிப்பதில்லை
எல்லா இல்லறத்திலும்
காதல் இனிக்கிறது



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# துரோகம்

சோகம் தாங்கும் இதயம் துரோகம் தாங்காது
மரணம் எதிரினில் வந்தாலும்
மனம் கலங்காது எதிர்த்து நிற்கும் இதயம்
நீ உடன் இருந்தால்

கொஞ்சிப் பேசி ஆசையை வளர்த்தாய்
அந்த வார்த்தைகள் பொய்யானதோ?
விழிகள் பேசிய வார்த்தைகள் பொய்யோ
விரல்கள் வருடிய பொழுதுகள் பொய்யோ
பொய்யென்று போனாலும் பொறுத்திடும் நெஞ்சம்
நீ விலகியதால்,
என்னுயிரும் என்னைவிட்டு விலகிடத் துடிக்குது

நீதான் முக்கியம் என தொடங்கும்
உறவுகள் எல்லாம் யார் நீ என்று முடிகிறது

எல்லாமே சில காலம் தான்
அது உறவாக இருந்தாலும் சரி
உயிராக இருந்தாலும் சரி



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# மாற்றம்

உண்ண உணவும் உடுத்த உடையுடன் இருப்பிடமும்
உன்னதமாய் நிதமும் கிடைத்திடும் மாற்றமாம்!
கையூட்டு பெறாது கடமை கண்ணியம் கட்டுப்பாடு
மறவாது பணி புரிந்திடும் மாற்றமாம்!

மேலோர் கீழோர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று
பாகுபாடின்றி உலவிடும் மாற்றமாம்!
அனைத்தும் அனைவருக்கும் உரியதென்ற
சீரிய சிந்தனைகள் சிரமேற்கொண்ட மாற்றமாம்!

மருத்துவத்திற்கும் கல்விக்கும் விலை இல்லாது
அனைவருக்கும் இலவசமாய் கிடைத்திடும் மாற்றமாம்!
விவசாயத்தைக் காத்திடும் உழவனையும்
நன்முறைப் படுத்திடும் மாற்றமாம்!

அவரவர் நாட்டில் உள்ளோருக்கே
பணி என்று நியமனம் பெற்றிட்ட மாற்றமாம்!
மாற்றம் நிலையானது என்ற
எண்ணமதில் மாற்றத்துடன்

நிதர்சனத்தை துறந்திடா நாளிலே
மலருமிந்த ஆட்சி மாற்றமும்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# உதிரும் புன்னகை

உதிரா பூவில்
உளரும் வண்டுகள்

உதிராநகை பூட்டியும்
இதழ் சுளித்து
உதிரும் பிறையிதழ்

உதிரா மேகத்தில்
உதிரும் மழைத்துளிகள்

உதிரும் மைத்துளிகள் தவறி
சில போழ்தில் தீட்டும் கவியோவியம்

மேகத்துளித் தீண்டி
மணமுதிரா மண்ணேது
கடைக்கண் உதறிய பார்வையில்
உதிரா கற்பனையேது!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# சாகசமில்லா வாழ்வு



சாகசமானதே வாழ்வும்
சாவையும் முயற்சி செய்திட வேண்டுமே
சாக்கு போக்கு சொல்லி
சாங்கியமாக்க முடியாதே

சாடை மாடை துயர்களையும்
சாட்டையடியோடு ஏற்க வேண்டுமே
சாட்டி ஓடி ஒளிய முடியாதே
சாணக்கியனாக எதிர்கொள்ள வேண்டுமே

சாத்தியம் என்ன நினையாமல்
சாதரணமாக போராட வேண்டுமே
சாதுவாக அமைதிகாத்தி
சாந்தமாக வென்றிடவேண்டுமே

சாந்தாக பிறர் அரைத்தாலும்
சாபமிடாமல் பொறுமை காக்க வேண்டுமே
சாப்பிடவே உழைக்கவேண்டுமே-முதலைகளிடமிருந்து
சாமர்த்தியமாக தப்பிக்கவேண்டுமே

சாமியையும் நம்பிட வேண்டுமே
சாம்பல் ஆகிடுவோம் நினைவில் வைக்கவேண்டும்
சாயங்களையும் அறியவேண்டும்
சாயங்காலமும் திட்டம் தீட்டிடவேண்டும்

சாரதியாக வாழ்க்கை வண்டியை
சாத்தானான மனிதரிடமிருந்து ஓட்டவேண்டும்
சாவிக்கேத்த பூட்டாக
சால்வை அணிவிக்கும் பிரச்சினைகளை
சாலையோர கானல்நீராக்கிட வேண்டும்

சாறை சாறையாக நகரும் வாழ்க்கை தனை
சாற்றில் சேர்த்த தேனோடு பருகவேண்டும்
சாகசமில்லா வாழ்வுமே
சாலவமில்லா நீரோடையாகுமே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# வெறுமை

கொஞ்சம் சலிப்புற்று சஞ்சலங்கள் சகித்து
சாந்தமாய் சமரசம் செய்து கொண்டே
நகர்கிறது வாழ்க்கை.

நில்லாதோடும் கடிகார முள்போல
ஓய்வின்றி காலம் கடத்த
எனக்கொன்றும் ஆசையில்லை.

கொஞ்சம் இளைப்பாறி
தலையாட்டி கதை கேட்கவும்
தலை சாய்த்துக் கதை பேசவும்
ஓரிரு நிமிடங்கள் போதுமாகுமா என்ன?

புகையிரத வண்டி போல
புகைந்தோடும் சிந்தனைகளையெல்லாம்
கொஞ்சம் சிறைப் பிடித்துவிட்டு
பெருமூச்சு விட்டு இளைப்பாறும்
அந்த ஓர் நாளிற்காய்த்தான்
ஓய்வின்றியலையும் இத்தனை போராட்டமும்.



கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

# உன்னை கடந்தேன்

மெய் யாதென அறியும் முன்னே
உன்னை கண்டேன்
பொய் யாதென அறியும் முன்னே
உன்னை கடந்தேன்
பொய்யின் மெய்யான வாழ்வில்.



கவிஞர் ம. ஹரீஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

நூலை படி
படிப்படி என்றேதான்
சொன்னாரு பாரதிதாசனார்.
படிப்படி நூலை படி
காலையில் படி கடும் பகலில் படி
மாலையில் படி பொருள்படும்படி படி
கற்கத்தான் வேண்டும் படி
ஊன்றித் தான் படி நீ உயர நித்தமும் படி
தத்துவங்கள் ஞான வாசலின் படிகள்.
மன ஓட்டத்தை மாற்றும் சிந்தனை பொறிகள்.
ஒவ்வொரு வார்த்தையும் நல்முத்துக்கள்.
பிரார்த்தனை உள்ளார்ந்த அழகு கொண்டதே!
அதனால் விளைவது மகிழ்ச்சியும் பரவசம்தானே!

நாம் உயிரோடு வாழவும், மூச்சு விடவும்
வண்ணங்கள் எல்லாம் காணவும் வைத்த
கடவுளுக்கு நன்றி சொல்வதே
பிரார்த்தனை ஆகும்.
கடவுள் கொடுத்த இந்த மகத்தான பரிசுகளுக்கு
நன்றி என்ற பிரார்த்தனை
ஒரு சிறு காணிக்கை மட்டுமே!


அன்பு
அன்பு இல்லாதவன் வாழ்க்கையில்
புன்னகை, உற்சாகம், மகிழ்ச்சி, நிறைவு
ஆகியவை இருக்காதே!

மனம்
கை, கால்களை போல் மனமும் ஒரு கருவியே!
நம் கை, கால்களை உத்தரவு இடுவதற்கு பதிலாக
நம்மை மீறி அவை அசைந்தால்
உடல் முழுவதுமே குழப்பம் தான் மிஞ்சுமே!
அதுபோலத்தான் நம் மனமும் நம் உத்தரவை மீறி செயல்பட
நாம் அனுமதித்தால் அது துன்பத்தைதான் தருமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# கல்வி கரையில

தேங்கிய நீரில்
எல்லைக் கோடுகளுடன்
வீழ்ந்து மறையும்
வானின் பிம்பம்
சமுத்திர அலைகளில்
படைவீரனாய்
பயிற்சி எடுக்க
அலைகள்
பக்கங்கள் திருப்ப
வானம் படிக்கிறது
முயற்சி மட்டுமே
வளர்ச்சி என்று



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# கதிரவனும் ஆசான்

உதிக்கின்ற கதிரவனிடம்
பிரகாசமாய் எப்போதும்
இருக்கிறாய் எப்படி?
வினவி நின்றேன்
கதிரவன் சொன்னது
உனக்குள்ளே நீயும்
தினமும் உதித்துப்பார் (தவம்)
பிரகாசமாய் இருப்பாய்



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

இப்பிடியும் தோன்றும்
சில கணங்கள்
பெருங்கடலின் சத்தத்தைவிட
மனதின் பேரிரைச்சல் வலுவோவென
மனதின் சத்ததில்

அழுத்தி அழுத்தி
மௌனமென்ற பெயர் சூடிடும்
மிக அழகாய்
வெடிக்கும் நாளில் சுழலும்
தீப்பந்து திசையெங்கும் சிதறும்
காந்தலின் கணம்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

## தொண்டரடிப்பொடி ஆழ்வார் -1

பாசுரம் 1-5 (5)

ஆழ்வார்கள் பன்னிருவர் வரிசையில் பத்தாமவர்
விப்ரநாரணர் திருவரங்க வாழ்வினரே! பாமாலை
பூமாலை சாற்றுகின்ற சேவையினார் மந்தங்குடி
மண்டங்குடி சோழநாடு குருசேனை முதலியென்பார்!
ஆக்கியவை திருப்பள்ளி யெழுச்சிபத்தும் திருமாலை
நாற்பதான வசனமென வைணவத்தின் தத்துவமாம்!
இயல்முத்து தகைமைத்தே மால்நெறியும் சைவவழியும்
ஒன்றிவளர் தன்மைக்குக் காரணரே! தொடர்புடைய
பண்டிகையோ ஸ்ரீரங்கம் வசந்தோற்சவம்! ஒன்பதுநாள்
பிரபாவின் மார்கழிசார் க்ரிஷ்ணபக்ஷ சதுர்த்திசேர்ந்த
கேட்டையமை செவ்வாயே! வேதவிசாரதர் தந்தையே
குடிமிசோழிய பிராமணரே! மாலவனின் பாட்டிசைக்கும்
விப்ரமக்கள் பன்னிரண்டாம் நாளதனில் பெயருற்றார்
விப்ரநாரணர் இன்பெயரே! இல்லரத்தில் விருப்பமிலார்!
தலதரிசனம் மேற்கொண்டார் முதலதுவோ அரங்கநகர்
பூஞ்சோலை கண்டங்கு பூமாலை சேவைதனை
ஏற்றாரே! நடனமங்கை தேவதேவி பித்தானார்!
செல்வநிலை வற்றிடவும் தொடர்பதனை விட்டனளே!
எம்பெருமான் பொன்வட்டில் சேர்பித்து தேவதேவி
ஏற்றிடவே செய்தாரே! இல்லாத வட்டிலதன்
வழக்காலே ஆலயத்தே திரும்பியதே! ரங்கநாதன்
குற்றவாளி தானென்று விப்ரநாரணர் அன்றென்று
மெய்ப்பித்தார்! விடுவித்தான் மன்னவனே! விப்ரநாரணர்
பிராயச்சித் தம்பலவும் ஆற்றிட்டே தூயரானார்!
தொண்டரடிப் பொடிபேரதை ஏற்றுயர்ந்தார் வாழியரே!



கவிஞர் கணக்காயர் (இ. சே. இராமன்)

# காதல் வைரஸே



என் இதயக் கதவை இறுகத்தாழிட்டு வைத்திருந்தேன்
நான் உன் நிழல் கூட அதன் மேல் விழக்கூடாதென்று.

இருந்தும் நீ என் அனுமதியும் அழைப்புமின்றி
இலகுவாய் நுழைந்து கொண்டாயே
அழைக்காமல் வருவது நாகரீகமா?
நான் மறுத்தும் நீ புகுந்து கொண்டாயே
இது உனக்கே நியாயமா?

என்னிதயத்தின் உதிரத்தை
சிறிது சிறுதாய் உறிஞ்சுகிறாயே
உன் தேகத்தின் தாகம் எப்போது தீருமோ?

என் அடி மனதின் ஆழம் வரை சென்று
'வாழ்வுகளைக்' கிள்ளி ரத்த நாளங்களை
நசுக்கி பார்க்கிறாயே.

என் உடலை உருக்குலைத்து உயிரையும் குடிக்கும் சக்தி
உனக்குள் இருப்பதை உணர்கிறேன் இப்போது - நான்.

என் இதயத்தில் ஆறாத ரணங்கள் உன்னால் ஆனதே
ரணங்களை குணப்படுத்துவாயோ இல்லை
இதயத்தை இம்சித்து காயத்தை தீண்டுவாயோ
என்று தான் குணமாகும் இந்த ரணங்கள்.

இனியும் தாங்க முடியுமோ
நீ இம்சிக்கும் என் இதயத்தின் வலியை.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல மாத்தளை

# ஆதலால் காதல் செய்வீர்

புதுப் பரிசு தருவதோ புத்தாடை அளிப்பதோ
பூங்கொத்து வழங்குவதோ காதலின் அடையாளமல்ல
துணை தள்ளாடுகையில் தாங்கி பிடிப்பதும்
சறுக்கிடும் வேளையில் விழமால் தாங்குவதும்

இடையில் யாரிடமும் விட்டுத் தராமலிருப்பதும்
இணையின் குறைகளை பொறுத்து கொள்வதும்
இதயம் பொதிந்த காதல் அல்லவா?

பருவத்தில் வருவது மட்டுமா காதல்?
பருவம் கடந்த பின்பும் பாசம் மாறா
பார்வை தானே காதல்
பள்ளியறையோடு முடிவதல்ல காதல்
கல்லறை வரை கூட வருவதே காதல்

காதலர்கள் சலிப்படைந்தாலும்
காதல் சலிப்பதில்லை
நீ என்ன தருவாய் என்பதா காதல்?
உனக்காக நான் எதையும் தருவேன்
என்பதே காதல்
காதலர்கள் கூடலாம் பிரியவும் நேரலாம்
காதல் என்றும் தோற்பதேயில்லை

திருமணத்திற்கு பின்பும்  தித்திக்கும் உறவிது
இணைந்தே பயணிக்கும் சுகமான பயணமிது
இருவரின் மனதும் புரிதலில் புனிதமானது
இளமை முடிந்தும் இனித்திடும் பந்தமிது

ஆதலால் காதல் செய்வீர்
கரம்பிடித்த  காதலை கண்மணி போல்  காப்பீர்



கவிஞர் பி. ரோஜாராணி, தேனி

# காதல் வானிலே!

பார்வைப் பரிமாற்றம், நிகழ்த்தியது பலமாற்றம்!
இரவெல்லாம் உறக்கமின்றி, இனம்புரியா ஒருணர்வு!
கற்பனையில் மிதந்து, கவிபடைக்க முயன்று,
சொற்களைத் தேடி சோர்வடைந்து போகின்றேன்!

ஒருவாராய் எண்ணத்தை உரைத்துவிட்டேன் அவளிடத்தே!
நாணித் தலைசாய்த்து, நங்கையவள் புன்னகைத்து,
கடைக்கண் பார்வையினால், காதலை உணர்த்திவிட்டாள்!
விடையறியாக் கேள்விகளை என்னுள் விதைத்துவிட்டாள்!

மிதக்கின்ற மேகங்கள் காதலுக்குத் தூதாக,
காதல் கைகூட மனமிரண்டும் துதிபாட,
இதயங்கள் இணைந்த பறவைகளாய் இருவரும்
கானம்பாடித் திரிந்திடுவோம் காதல் வானிலே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# மறதி

முதலில் என் வினவல்
மறதி வாழ்வின் வரமா? சாபமா?

மறதி அவ்வப்போது வந்து செல்லும்
விருந்தாளியானால் வரம்
அதுவே வாழ்வின் பகுதியானால்
நிச்சயம் சாபம்!

மனைவி மீது கொண்ட காதலால்
முடி எடுத்ததை மறந்து
மல்லிகை வாங்கி வந்த கணவன்
காணொளி கண்டு களிப்புற்றோம்!
உண்மையில் அது பல நேரம்
நிகழ்கையில் சாபமே!

அதுவே முதலாம் பங்காளி வீட்டில்
நடந்த மனக்கசப்பை
மூன்றாம் பங்காளி வீட்டில்
மறந்து மனம் மகிழ்ந்தால்
அது வரமே!

நீரும் காற்றும் போலவே
மனித குல வாழ்வுக்கு மறதி அவசியமே!

வள்ளுவன் வாக்கைப் போல
நல்லன நினைத்தலும் கெட்டவை மறத்தலும்
அவசியமே!

மறதி இல்லாவிட்டால் மனிதங்கள் ஏது?
மறதியினால் தானே மனித குலமே வாழ்கிறது



கவிஞர் க. நிவேதா

# யாரை நம்புவது?

நன்றி கெட்ட நயம் நாளெங்கும்
நம் கண் முன்
தீண்டும் தோரணையில் தினம் ஓர் புதிர்
அது ஏன் இந்தக் கதிர்
காணும் காலச்சுவடுகளில்
இதுவும் ஓர் ஒப்பனை கூற்று
யார் யாருக்கு என்று அறியாமல்
அறிந்தும் அறிந்த முன்பும்
பின்பு நீ யார் நான் யார் என்று
கேள்வி கேட்டு எங்கெங்கோ சென்று
காலம் நம் கண் முன் கடந்து செல்கிறது இன்று
இங்கு நல்லவர் யார் கெட்டவர் யார் என்று
அறிய முடியாமல் பலரும் பலர் வழியில்.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

## மனதின் ஓரத்தில்



அறிந்தவரின் வெற்றியையும்
மகிழ்ச்சியையும் எதிர்பார்ப்பு
நிறைவேற்றம் கேட்பது
அது நமக்கு
சந்தோஷம் கொடுக்கின்ற
அதே வேளையில்

நமக்கும் இது
உடனடியாய் கிடைக்காதா
என மனதின் ஓரத்தில்
எட்டிப்பார்ப்பது மனிதஇயல்பு

தகுதி உழைப்பு திறமை
இருக்கிறதா என பார்ப்பது
புத்தியின்வேலை

****

## அந்த பொழுதுகள்

கடும் உழைப்பு பார்க்கா
என்ன செய்து விட்டாய்
ஒன்றும் நடக்கவில்லை
நடந்ததும் சரியில்லை
என்ற ஏளனப்பேச்சும்

யாரிடம் பகிர்ந்தால்
ஆறுதலும் நம்பிக்கையும்
தீர்வும் கிடைக்கும்
என புத்தியின் அலைபாயலும்

ஒன்றுமே ஓடாமல்
அதைப் பற்றியே சிந்தனை
செக்குமாடாய் சுற்றிசுற்றி வருதலும்

இறுதியாய் இறையிடத்து
உள்ளுக்குள்ளேயே அருகில் யாரும்
இல்லையெனில்
உதடு மொழியாய் முணுமுணுத்தலும்
விடிவு வருமா என்ற ஏக்கத்துடன்
அந்தபொழுதுகள்
கடக்க விரும்புகின்ற
எளிதில் கடக்க முடியா பொழுதுகள்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

மொழி எதற்கு
பூக்கள் பேச
நாம் இருக்கிறோம்
*

உன் வருகை
வானம் கொண்டாடும்
மழைத்துளி ஊற்றி.
*

கடவுளிடம் வேண்டுதல்
கண்ணாடியில் நீ தெரிய
எனக்கு மட்டும்
*

மயக்கம் தெளிய
முத்தமிடுகிறாய்
உணவா மூச்சா
*

ஒவ்வோரு காட்சியிலும்
உனது சொற்கள்
வசனங்களை வாழ்விக்கின்றன
*

நீ இசை
உனக்கான மெட்டு
என்னுள்
*

உயிர்த்தாகம்
பார்வை நதி கேட்டால்
மௌனத்துளி தருகிறாய்
*



குளிரும் உச்சிவெயில்
உனக்கான காத்திருப்பில்
என்னோடு சேர்ந்து
*

என்னை எரித்தாலும்
உன்னில் படியும்
என் நினைவுப் புழுதி
*

கனவுகளில் வாசம்
நீ வரும்
ஒவ்வொரு காட்சியிலும்
*

ஒவ்வொரு எழுத்தும்
உன்னைச் சேர்த்தபோது
கல்வெட்டுப் பொருளாகிறது

கவிஞர் இளையவன் சிவா

இவ்வளவு விஷயம் இருக்கும் இடத்தை
வாய் கூசாமல்
மொட்டை மாடி என்கின்றனர்
***



நரகத்தில் இருந்து
மருவி வந்த சொல்தான்
நகரம் போலும்
***

கயித்து கட்டில்
உறுத்தும் அளவிற்கு
சுகம் கண்டு விட்டோம்
***

வரி வரியாய் பூ தொடுத்து
தலையில் சூட மறுக்கிறாள்
பூக்காரி
***

மீன்களும்
வெட்கப்படும் போல
" மீன்பிடித்தடை"
***

மனம் களிப்பதும்
மலம் கழிப்பதும்
ஆரோக்கியத்தேவை
***

படகில் மீன்கள்
கரையொதுங்கிய
பிணங்கள்
***

தொழில்நுட்ப
பரிசுகளில் ஒன்று
தொப்பை
***

பட்டன் ஃபோன் இருந்தமட்டில்
பட்டும் படாமல் இருந்தோம்
அனைவரிடமும்
***

தவறாய் புரிந்து கொண்டீர்கள்
ஆண்மை என்பது தனி சொல்
பெண்மைக்கு எதிர்ச்சொல் அல்ல

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்



அந்த அரங்கு முழுவதும் களை கட்டியிருந்தது. அருகிலிருந்த கடையில் சிகரெட் வாங்கிக் கொண்டு அரங்கின் அமைப்பை கவனித்தான். ''என்ன பார்க்கிறே... சென்டிரல் மினிஸ்டர் வரப் போகிறார்.'' என்று மரத்தடியில் சொன்னான் கடைக்காரன். அரங்கத்தின் அருகிலுள்ள கடையின் வாசலில் ரிப்பன் கட்டப்பட்டு இரண்டு இளமங்கைகள் கையில் டிரேயுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

தமிழகத்தின் விடிவிளக்கே! அன்பு அண்ணனே வருங்காலப் பிரதமர் மாண்பு மிகு மந்திரி வலம்புரி மாதவன் அவர்களே வருக! வருக! என்று பெரிதாக எழுதி கட்டியிருந்தார்கள். அரங்கத்திற்குள் வருகின்ற தமிழ் முகங்கள் யாராவது தெரிந்தவர்களாக இருந்தால் பிரச்சினையாகி விடும் என்று புரிந்து கொண்டு ஒதுங்கி நின்று சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான்.

அரங்கத்திற்குள்ளே மேடையில் யாரோ ஒருவர் வலம்புரி மாதவன் செய்த சாதனைகளைப் பட்டியல் போட்டு இந்தமாதிரி ஒரு நல்ல மனிதர் அரசியலுக்கு வந்ததால் தான் வடக்கே தமிழினம் தலை தூக்கி நிற்க முடிகிறது. அதனடிப் படையில் நாம். நம் அண்ணன் வலம்புரி மாதவன் அவர்களை பிரதமராக்கினால் தமிழ்நாட்டிலே தேனும் பாலும் ஓடும். சிங்காரத் தமிழ்நாடு உருவாகும். தெற்கு மேலோங்கிநிற்கும் இந்தியா முழுவதும் தமிழ் மொழியின் தீந்தென்றல் வீசும் எனப் பேசிக் கொண்டிருந்தான். பலர் மந்திரியைப் பார்த்துவிட்டு உடனடியக கிளம்பி விட கைகளில் மாலைகளுடன் வெள்ளை சால்வைகளுடன் வாசலிலேயே காத்துக்கொண்டிருந்தனர். கொஞ்ச நேரத்தில் சலசலப்பு ஏற்பட என்ன செய்ய வேண்டும் என்ற கற்பனை கலைந்து போக, வந்த போலீஸ் கூட்டத்தைப் பார்த்துத் திகைத்துப் போனான் பழனி.

இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு வாங்கிய சால்வையை விரித்து கீழே துப்பாக்கியை மறைத்துக் கொண்டு எல்லோருடனும் வரிசையில் நின்று கொண்டான்.

மந்திரி வந்து கொண்டிருக்கிறார் என்ற பரபரப்பு எல்லோரையும் தொற்றிக் கொள்ள போலீசார் ஒவ்வொருவரையும் தொட்டுப் பார்த்து எந்தவித உபகரணங்களும் இருக்கிறதா என்று செக் பண்ணி உள்ளே விட்டுக் கொண்டிருந்தனர். பழனியின் கையில் சால்வைக்குக் கீழே அமைதியாக துப்பாக்கி தூங்கிக் கொண்டிருக்க அவனைச் செக் பண்ணிய அதிகாரி அவனை அரங்கிற்குள் அனுமதித்து விட்டு அடுத்தவனைச் செக்பண்ண ஆரம்பித்தார்.

வாசலைத் தாண்டியதும் மந்திரியின் கார் வந்து விட திரும்பிப் பார்த்தான். பெரிய வட்டமாக போலிஸ் சூழ்ந்து கொள்ள நான்கு புறமும் கறுப்புப் பூனைப்படையினர் ஆயுதமேந்தி கூட்டத்தை பூதக்கண்ணாடிப் போட்டு சரி பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தக் காவல் படையினர் ஏற்கெனவே பழனியைப் பார்த்திருப்பதால் பழனிகைக்குட்டையை எடுத்து விரித்து முகம் துடைக்கும் பாணியில் முகத்தை மறைத்துக் கொண்டான். கூட்டத்தில் நின்றவர்கள் வாசலிலேயே அவருக்கு மாலையணிவிக்கவும் சால்வைப் போடவும் மந்திரி வலம்புரி மாதவன் வாழ்க என்று கோசம் போடவும் ஆரம்பித்தனர்.

மந்திரியை நெருங்கி வந்து முன்னால் நின்று முன்னால் மாலை போடுபவர் மாலை அணிவித்தவுடன் அருகில் போய் சத்தமில்லாமல் மந்திரியின் இதயத்தை தோட்டாவால் துளைத்துவிட வேண்டியது தான் என்ன? இந்த பூனா ஜெயிலில் களி தின்ன வேண்டியிருக்கும். மிஞ்சிப் போனால் பன்னிரெண்டுவருடம் ஜெயில் வாசம் கவுசல்யா... உனக்காகநான்... ஜெயிலுக்குப் போகவும் தயங்கவில்லை. ஆனால் இந்தக்கழிசடையைக் கொன்றுவிட்டு நான் ஏன் சிறைவாசம் அனுபவிக்கவேண்டுமென்று தான் வருத்தமாக இருக்கிறது.

பரவாயில்லை... என் அன்புத் தங்கைக்காக இனி துணிவே துணையோடு இறங்கிவிட வேண்டியது தான் என்று அருகில் செல்ல மந்திரி மாவதன் முகத்தில் சலனத்தைக் கவனித்தான்பழனி.

'ஒரு வேளை என்னைக் கண்டு கொண்டானோ.... இப்போது இவன் கைவிரல் அசைத்தால் போதும்... நான்சட்னி... ம்...கூம்.. தயங்கக் கூடாது. இனி இவன் ஐயப்படுவதற்குள் நான் செயல்பட்டு விட வேண்டியது தான். இனி பொறுமையாக செயல்படுவதற்கு நேரமில்லை என்று அவசரமாக மந்திரியை நெருங்கும் போது

"தலைவரே! ராகுகாலம் நெருங்குவதற்குள் கடையைத் திறந்து வச்சிட்டீங்கண்ணா மற்றபடி மெதுவாக தொண்டர்களிடம் மாலை மரியாதை எல்லாம் செய்யச் சொல்லலாம். அதன் பிறகு நம் பொதுகூட்டத்திற்கு போகலாம்." என்று அவரை அழைத்தாள் ஒரு தலைவி.

"சரி ஒரு நிமிடம்" என்று ஒதுங்கிக் கடையை நோக்கி நடக்க ஆரம்பித்த மந்திரி வலம்புரி மாதவன் ஒருகாவலாளியைக் கூப்பிட்டு "அதோ அங்கே முகத்திலே கர்ச்சீப்பை வைத்து துடைத்துக் கொண்டிருக்கிறானே அவனை அலாக்காகத் தூக்கிக் கொண்டு நம்முடைய கெஸ்ட்ஹவுசிலே அடைத்துவையுங்கள். எனக்கு அவன் மேல் கொஞ்சம் சந்தேகமாக இருக்கிறது." என்று கைக் காட்டி சைகை செய்ய கூட்டத்திற்குள்ளிருந்து நழுவி சிகரெட் கடையின் பின்புறமுள்ள சந்தில் ஒதுங்கி நின்று கொள்ள செக்யூரிட்டிகள் அவனைத் தேட ஆரம்பித்தார்கள். எல்லோரும் கைதட்ட கடையைத் திறந்து வைத்து ரிப்பன் வெட்டி கேக் எடுத்துச் சாப்பிட்டு கொண்டே திரும்பி செக்ரியூட்டியிடம் சைகையில்கேட்டார். அவன் காணவில்லை என்று சைகை செய்ய... "தே... பசங்களா அவனைப் பிடித்து கொண்டு வரவில்லை என்றால் உங்களைத் தொலைத்து விடுவேன்." என்று பல்லைக் கடித்துக் கொண்டு சைகைசெய்ய "என்ன தலைவரே?.... என்ன விசயம்?" என்று கேட்டாள் அந்தப் பெண்மணி.

ஒன்றுமில்லை புழுக்கமாக இருக்கிறது.'' என்று கைக்குட்டை எடுத்து துடைத்துக் கொண்டார் மந்திரி.

மூச்சிறைக்க திரும்பவும் மருத்துவமனைக்கு வந்தபடுக்கையில்படுத்த போது மூச்சிறைத்தது. நன்றாக மூச்சை வாங்கிக் கொண்டு அருகில் இருந்த சுடு தண்ணீரை உறிஞ்சிக் குடித்தான். அந்த வழியாக வந்த பணிப்பெண் ''ஏய்... எங்கே ஓடினாய்? இங்கிருந்து வெளியே போனவர்கள் திரும்ப அனுமதிக்கப் படமாட்டார்கள்.'' என்றாள் "ஸ்...ஸ்... "என்று சைகை செய்தவன் பையில் இருந்து ஐம்பது ரூபாயை எடுத்து அவளிடம் கொடுக்க அவள் வாயை மூடிக் கொண்டுவாங்கிச் சென்றாள்.

கீழே எட்டிப் பார்த்தப் போது மந்திரியின் செக்யூரிட்டிகள் வேகமாக மருத்துவமனைக்குள் வந்து கொண்டிருக்க வேகமாக பக்கத்தில் கிடந்த வெள்ளைத் துணியை எடுத்து முகத்தில் கைகளில் எல்லா இடங்களிலும் காயத்திற்குப் போட்டகட்டுகள் போல கட்டுப்போட்டுக் கொண்டான். வந்து ஒவ்வொரு படுக்கையாக பரிசோதித்த காவலாளிகள் பரிசோதித்து விட்டு இறங்கிச்செல்ல, "மை டியர் சன் நீ ஏதோ தவறான காரியத்தில் இறங்கித் தப்பி வந்திருக்கிறாய். மனம் வருந்தி பாவத்தை வெளியிடுபவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று தேவன் சொல்லியிருக்கிறார். வருந்திப்பாரம் சுமப்பவர்களே என்னிடம் வாருங்கள், உங்களுக்கு இளைப்பாற்றித் தருவேன். என்று சொல்லியிருக்கிறார். "என்றவாறு அருகில் அமர்ந்து அவனுக்கு மாத்திரை கொடுத்து தூங்க வைத்தார் வெண்ணுடை சிஸ்டர்.

மஞ்சளா வேகமாக சோளக் காட்டிற்குள் ஓடிவந்தாள். கதிர் கொய்து கொண்டிருந்த பழனி ''என்ன மாமன் மகளே... இந்தப் பக்கம் வந்திருக்கிறே.'' என்று நக்கலாகக் கேட்டான். ''என் வீட்டிலே என்னைப் பொண்ணு பார்க்க பக்கத்து டவுணிலேயிருந்து படிச்ச மாப்பிள்ளை வந்திருக்கு.'' "அட நல்ல விசயம் தானே எப்போது கல்யாணம் உள்ளே

வந்த திகைப்பைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்துக்கொண்டே கேட்டான் பழனி.'' "உங்களுக்குக் கோபம் வரலியா மச்சான்.'' அழுதுவிடுபவள் போல் கேட்டாள் மஞ்சுளா.

"எனக்கு ஏண்டியம்மா கோபம் வரப் போகுது. நீ கல்லாணம் பண்ண வேண்டிய வயசிலே இருக்கிறே. உன் அப்பன் ஆத்தா... அதான் எங்க மாமா, மாமி உனக்கு கல்யாணம் பண்ணி வச்சி நல்ல முறையில் குடும்பம் நடத்த வசதியாக ஒரு டவுண் மாப்பிள்ளையை கூட்டியாந்திருக்காக ...இதிலே நான் கோபப்பட என்ன இருக்கு.?"

''சரி அப்போ நான் அந்த டவுண் மாப்பிள்ளையையே கல்யாணம் பண்ணிக்கிறேன்." அவள் அழுது கொண்டே திரும்ப நடக்க, அந்தப் பக்கம் வந்தப் பழனியின் அம்மா "ஏன்டா அவ அழுது கிட்டுப் போறா. நீ ஏதாவது சொன்னியா?'' என்று கேட்டாள். ''நான் ஒன்றுமே சொல்லவில்லையம்மா.'' என்றான். பவ்யமாக

"உன் வாய் சும்மா இருக்காது. மஞ்சுளாவை ஏதாவது சொல்லி அழ வைத்திருப்பாய். போடா போய் அவளைச் சமதானப்படுத்து" என்றாள். பழனியின்அம்மா. கதிர் கொய்து கொண்டிருந்த அரிவாளை கடவாய்ப்பெட்டிக்குள் போட்டுவிட்டு வேகமாக வரப்பிற்கு வந்து மஞ்சுளாவை வழி மறித்தான். ''என்னைப் போக விடுங்க...''சிணுங்கினாள் மஞ்சுளா.

"சும்மா எதுக்கெடுத்தாலும் அழப்படிச்சிருக்கே இதுக்குத்தான் அப்பவே மாமா கிட்ட பொண்ணு கேட்டு வர்றேண்ணேன். நீ தான் உலகத்திலே யாருமே படிக்காத மாதிரியும் நீ மட்டுந்தான் காலேஜிக்குப் போய் படிக்கிற மாதிரியும் நான் படிச்சு முடிக்கிற வரைக்கும் நீங்க எதுவும் பேசவேண்டாம் என்று சொன்னாய்... இப்ப என்ன செய்யச் சொல்கிறாய்.''

"ஆமா என்ன செய்கிறதென்று என்னைக்கேளு மடை மச்சான். மச மசன்னு நிக்காம என்னைத் தூக்கிட்டுப் போய் தாலிய கட்டுவியா........ அதை விட்டு விட்டு சோளக்கொல்லை பொம்மை மாதிரி பார்த்துகிட்டு நிக்கிறியே...." "அதானே பார்த்தேன் என் வேலையைக் கெடுக்கிறதுக்கு என்றே எடுத்துக் கட்டிக் கொண்டு நீ தோட்டத்துக்கு வந்திருக்கே போய் ஒழுங்காக படிக்கிற வழியைப் பாரு."

"ஏய்யா..நீயெல்லாம் ஒரு ஆம்பிளை புள்ள தானா? மனுசனா... ஒரு பொண்ணு உன்னை ஓரங்கட்டுகிறாள் அதைத் தெரிஞ்சிக்காமல் எங்கேயோ சோளக்கதிர் அறுக்கிறதுக்கு ஓடிறியே. "நீ சொல்றதும் சரிதானெ"ன்று மஞ்சுளாவின் அருகில் வந்து அவளை முத்தமிட முயல "யோவ் உங்கம்மா பார்த்துகிட்டிருக்காங்க."என்றுஅவனைத்தள்ளினாள்.

"அப்போவா... அந்த மிசின் கிணற்றுப் பக்கம் ஒதுங்கி நின்னுக்கலாம்." முகம் சிவக்க அவனோடு கிணறு வரை நடந்தாள் மஞ்சுளா. "இம்புட்டு ஆசை வச்சிகிட்டு தான் படிச்சு முடி அப்புறம் பொண்ணு கேக்கவர்றேன்னு சொன்னீகளாக்கும்."

"ஏதோ பொண்டாட்டியா வரப்போறவ படிக்க ஆசைப்படுறா நம்ம தான் வர்றவளாவது நாலெழுத்து படிச்சிட்டு வரட்டுமேன்னுதான்..." அவள் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான் பழனி. கையை உதறிக்கொண்டவள்

"சீ...ஏன்?... தப்புக் கணக்குப் போடுகிறாய்?. நான் ஆம்பிள்ளைச் சிங்கமடி உள்ளுக்குள் பதற்றமாக இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ள முடியுமா?" என்று அருகில் வந்து அணைத்துக் கொள்ள முயற்சிக்க "இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் தான் மாமோய்...."என்று அவனைத் தள்ளி விட்டு ஓடினாள் மஞ்சுளா.

தொடரும்...

கவிஞர் இரஜகைநிலவன்

# DR. ஆட்டோ

## வாசிப்பு அனுபவம்

வணக்கம்!

"DR. ஆட்டோ-நூல் குறித்த, என் வாசிப்பனுபவத்தை இங்கே பகிர்கிறேன்.

ஆசிரியர்: மு. திவ்யதர்ஷினி (13 வயது)
பக்கங்கள்: 16; விலை: ரூ 16/-
பதிப்பு: வண்ணத்துப்பூச்சிகள் பதிப்பகம், சென்னை — 28.
அலைபேசி எண்.: 7010 30 9595 / 9382 301 898

உலகெலாம் இருக்கும் நிலவழிகளில் சாலைகள் மட்டும் இன்றி குறுக்குத் தெருக்கள், சந்துகள் என எத்தனையோ பயணப் பாதைகள் உள்ளன. அத்தனையையும் நாடி பிடித்தார்போல் அறிந்து வைத்துள்ளவர்களில் ஆட்டோ ஓட்டுநர்களும் ஒரு சாரர்கள். நம் பல்வித பயணங்களில் ஆட்டோவையும் அதை ஓட்டுபவரையும் தவிர்க்க இயலாது. அன்றாட வாழ்வில் உழைப்புடன் அல்லல்படும் அந்த ஆட்டோ ஓட்டுநர்களுடைய வாழ்வியலில் நடக்கும் சிலவற்றை DR. ஆட்டோ என்ற படைப்ன் வழியே காட்டுகிறார்கள் இரு மாணவிகள். சகோதரிகளான இவர்களில் இளையவர் மாணவி மு. திவ்யதர்ஷினி (13 வயது, 9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப்பள்ளி, கண்ணகி நகர், சென்னை.) எழுதியுள்ளார். மூத்தவர் மாணவி மு. நர்மதா (15 வயது, 11ஆம் வகுப்பு, அவ்வை ஹோம் டி.வி.ஆர். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அடையார், சென்னை.) ஓவியங்கள் வரைந்து உள்ளார்.

தமிழ் சொற்பொழிவாளர், புரசைவாக்கம், ELM மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு அருள் பிரகாஷ் அவர்களின் வாழ்த்துரையுடன் தொடங்குகிறது இப்படைப்பு. பார்த்து, புரிந்து, உள்வாங்கி எழுதப்பட்டது அல்ல இது. ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வியலை, அவர்களோடு குருதியுறவினால், வாழ்வதினால் அனுபவித்து எழுதப்பட்டுள்ளது.

இந்த 16 பக்கங்கள் உள்ள நூலில் இடம் பெற்றுள்ள ஓவியங்களில், 11 பக்கங்களில் ஆட்டோக்கள் ஓவியங்களால் அணியமாக உள்ளன. வெவ்வேறு காட்சிப் பின்னணிகளுடன் ஆட்டோக்களின் ஓவியங்கள் பொருத்தமாக உள்ளன.

இளம் பருவத்திலேயே எழுதாக்கத்திலும் ஓவியக்கலையிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இவ்விரு சகோதரிகளிக்கும் நல்வாழ்த்துக்கள்! இம்மாணவிகளின் முயற்சிக்கு முன்னின்று வழிகாட்டும் வண்ணத்துப்பூச்சிகள் மின் இதழ் ஆசிரியர் திரு லூ. தாமஸ் அவர்களுக்கு பாராட்டுகள்!

இவ்வழுத்தாக்கத்தின் வழியே ஆட்டோ ஓட்டுநர்களை, அவர்களின் உழைப்பை மதிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. உரிய மதிப்பளிக்கையில் உள்ளார்ந்த மனிதமும் உழைப்பும் உன்னதம் பெறும் என்பது உண்மையே!




நெஞ்சார்ந்த வணக்கங்களுடன்,

**கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி**

## கட்டுரை

### பிறப்பு



தமிழ்நாட்டில் சிவகங்கை நகருக்கு அருகில் உள்ள தென்னவராயன் புதுக்கோட்டையில் 1870 — செப்டம்பர் -20 ஆம் நாள் இரா. இராகவையங்கார் பிறந்தார். இராமாநுசையங்காரும் பதுமாசனி அம்மையாரும் இவர்தம் பெற்றோர் ஆவர்.

### கல்வி

இராமநாதபுரத்தில் பள்ளியிறுதி (Matriculation) வரை பயின்று தேறினார். பின்னர் தன் மாமாவிடத்தும் சேதுசமத்தானத்தில் இருந்த பிற புலவர்களிடத்தும் தமிழும் வடமொழியும் பயின்றார்.

### தமிழாசிரியப் பணி

1888-ஆம் ஆண்டில் தன்னுடைய 18-ஆம் அகவையில் மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். இங்குப் பணியாற்றும் பொழுது சானகி அம்மாள் என்பவருக்கும் இவருக்கும் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகளும் இராமானுசையங்கார் என்னும் மகனும் பிறந்தனர்.

பின்னர் திருச்சிராப்பள்ளியில் உள்ள, பின்னாளில் தேசிய உயர்நிலைப் பள்ளி என அழைக்கப்பட்ட, சேசையங்கார் பள்ளியில் சிலகாலம் இவர் தமிழாசிரியராக இருந்தார். அப்பொழுது தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள கல்லூரியில் தமிழாசிரியராக வேலைபார்த்து வந்த உ. வே. சாமிநாத ஐயரோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# கட்டுரை

### சேது சமத்தான அரசவைப்புலவர்

இராமநாதபுர சேதுசமத்தானத்தான அரசராக இருந்த பாசுகரசேதுபதி, தன்னுடைய அரசவையின் தலைமைப் புலவராக இரா. இராகவையங்காரை நியமித்தார். இதன்படி பாசுகரசேதுபதி, முத்துராமலிங்க ராசராசேசுவர சேதுபதி, சண்முக ராசேசுவர சேதுபதி என்னும் தாத்தா, தந்தை, பெயரன் ஆகிய மூவரின் அரசவையிலும் புலவராகத் திகழ்ந்தார்.

### மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

1901-செப்டம்பர்-14ஆம்நாள், பாலவநத்தம் நிலக்கிழார் பாண்டித்துரைத் தேவரின் முயற்சியால் பாசுகர சேதுபதியின் ஆதரவோடு, மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்திலிருந்து தமிழ்ப்பணி புரிய இரா. இராகவையங்காரை பாசுகரசேதுபதி அனுப்பி வைத்தார். அச்சங்கத்தின் நூற்பதிப்பு, ஆராய்ச்சி ஆகிய துறைகளின் தலைவராக இரா. இராகவையங்கார் பொறுப்பேற்றார். அப்பொழுது பல இடங்களுக்கும் சென்று பழஞ்சுவடிகளைத் திரட்டினார். அவற்றை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பாண்டியன் நூலகத்தில் தொகுத்து வைத்தார்.

அச்சங்கத்தின் சார்பில் 1902-திசம்பர் 7-ஆம் நாள் செந்தமிழ் இதழ் தொடங்கப்பட்டது. அந்த இதழின் முதலாவது ஆசிரியராக இரா. இராகவையங்கார் பொறுப்பேற்றார்.

1910-ஆம் ஆண்டில் மீண்டும் இராமநாதபுரத்திற்குத் திரும்பி, இராசராசேசுவர சேதுபதியின் அவையில் அரசவைப் புலவராக இருந்தார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

### அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்

1935-ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சித் துறை உருவாக்கப்பட்டது. அத்துறையின் முதன்மை ஆராய்ச்சியாளராக 1935-ஆம் ஆண்டு முதல் 1941-ஆம் ஆண்டுவரை பதவி வகித்தார். அப்பொழுது தமிழிலக்கிய, இலக்கண ஆய்வில் ஈடுபட்டதோடு முதுகலை மாணவர்களுக்குத் தமிழிலக்கியத்தைக் கற்பித்தார்.

### பெற்ற பட்டங்கள்

மேலைச்சிவபுரி சன்மார்க்கச் சங்கத்தின் ஆண்டு விழாவிற்குத் தலைமையேற்ற உ. வே. சாமிநாதய்யர், மகாவித்துவான் என்னும் பட்டத்தை இரா. இராகவையங்காருக்கு வழங்கினார். வடமொழியில் இவருக்கு உள்ள புலமையைப் பாராட்ட விரும்பிய சமசுகிருத சமிதி இவருக்கு பாசாகவிசேகரர் என்னும் பட்டத்தை வழங்கியது.

### இறுதிக்காலம்

1941-ஆம் ஆண்டில் அண்ணாமலை பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், இராமநாதபுரத்தில் உள்ள தன்னுடைய மாளிகையில் தன்னுடைய இறுதிக் காலத்தைக் கழித்தார். கண்பார்வை மங்கிய பின்னர், மற்ற இடங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றுவதைக் கைவிட்டார். தன்னை நாடிவருபவர்களுக்கு மட்டும் தமிழ் கற்பித்து வந்தார். 1946 — சூலை — 11-ஆம் நாள் மரணமடைந்தார். அப்பொழுது அவரைப் பற்றிப் பிற அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளையும் கவிதைகளையும் தொகுத்து 1946ஆம் ஆண்டு ஆனிமாத செந்தமிழ் இதழை இரா. இராகவையங்காரின் நினைவு மலராக மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## கட்டுரை

### இயற்றிய நூல்கள்

| வ.எண் | மு.பதிப்பு ஆண்டு | நூல் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 1917 | வஞ்சிமாநகர் | ஆய்வுரை |
| 2 | 1924 | சேதுநாடும் தமிழும் | மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 13 ஆண்டுக் கூட்டத்தில் படிக்கப்பட்டது |
| 3 | 1927 | புவி எழுபது | செய்யுள் நூல் |
| 4 | 1932 | தொழிற்சிறப்பு | செய்யுள் நூல் |
| 5 | 1933 | திருவடிமாலை | செய்யுள் நூல் |
| 6 | 1933 | நல்லிசைப் புலமை மெல்லியர்கள் | ஆய்வு நூல் |
| 7 | 1934 | அண்டகோள மெய்ப்பொருள் | ஆய்வு நூல் |
| 8 | | நன்றியில் திரு | செய்யுள் நூல் |
| 9 | 1937 | பாரிகாதை | செய்யுள் நூல் |
| 10 | 1938 | அபிசஞான சாகுந்தலம் | வடமொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட நூல் |
| 11 | 1941 | தமிழ் வரலாறு | |
| 12 | 1949 | தித்தன் | ஆய்வு நூல் |
| 13 | 1951 | கோசர் | ஆய்வு நூல் |
| 14 | 1983 | இராசராசேசுவரசேதுபதி ஒருதுறைக் கோவை | செய்யுள் நூல் |
| 15 | 1985 | ஆத்திசூடி உரை | |
| 16 | 1987 | ஆராய்ச்சிக் கட்டுரைகள் | |
| 17 | 1992 | இனிய இலக்கியம் | |
| 18 | 1994 | கம்பர் | |
| 19 | 1994 | செந்தமிழ் இன்பம் | |
| 20 | 1994 | தமிழக குறுநில வேந்தர்கள் | |

கட்டுரை

**பதிப்பித்த நூல்கள்**

| வ.எண் | மு.பதிப்பு ஆண்டு | நூல் |
|---|---|---|
| 1 | 1901 | அகநானூறு |
| 2 | 1902 | ஐந்திணை ஐம்பது உரை |
| 3 | 1902 | கனாநூல் |
| 4 | 1903 | வளையாபதிச் செய்யுட்கள் |
| 5 | 1903 | மதுரைத் தமிழ்ச் சங்கத்து புலவராற்றுப்படை |
| 6 | 1903 | இனியவை நாற்பது மூலமும் உரையும் |
| 7 | 1903 | நேமிநாதம் மூலமும் உரையும் |
| 8 | 1904 | திருநூற்றந்தாதி மூலமும் உரையும் |
| 9 | 1904 | திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும் |
| 10 | 1904 | பன்னிருபாட்டியல் |
| 11 | 1904 | நான்மணிக்கடிகை |
| 12 | 1905 | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் மூலம் |
| 13 | 1917 | தொல்காப்பியச் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை |
| 14 | 1946 | குறுந்தொகை விளக்கம் |
| 15 | 1949 | பெரும்பாணாற்றுப்படை |
| 16 | 1951 | பட்டினப்பாலை |

திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை நமதே

# எவன் ஒருவன் தனக்குத்தானே
# மனக் கட்டுப்பாடுகளை
# ஏற்படுத்தி கொள்கிறானோ
# அவனே சுதந்திர மனிதனாவான்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com